மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு முதலிலேயே நான் பதில் சொன்னேன். யாரால் கொடுக்கப்பட்டது என்றால், அரசால் கொடுக்கப்பட்டது. எவ்வளவு ஏக்கர்கள் என்றும் சொல்லி இருக்கிறேன். அவர்கள் எவ்வளவு மதிப்புக்கு எடுக்கிறார்களோ அந்த அளவுக்கு அரசாங்கத்திற்கு தொகையைக் கொடுக்கிறார்கள்.

தேனி தொகுதியில் கூட்டுறவுத்துறையில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.

*வினா எண் 705—திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தேனி சட்டப் பேரவைத் தொகுதியில் கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆய்வில் உள்ளது.

மின்சார பல்பு தயாரிக்கும் தொழிற்சாலை.

*வினா எண் 706—திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் அரசாங்கம் சொந்தமாக மின்சார பல்பு தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். என். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் கேள்விக்கு இடம் இல்லையென்று சொல்லுகிறார்கள். தற்பொழுது எல்லா மாவட்டங்களிலும், அந்தந்த மாவட்டத்தைப் பொறுத்து

1981 ஏப்ரல் 15]

தொழில்கள் அமைக்கக் கூடிய இந்த நல்ல நேரத்திலே சாத்தான்குளம் ஒன்றியத்தில், சாத்தான்குளத்தில் இது போன்ற பல்புகள் தயாரிக்க மூலப்பொருள்கள் நல்லமுறையில் இருக்கிறது. எனவே, அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தனியார் துறையில் Kalpana Lamp Compononts pivate Limited என்ற நிறுவனம் தயாரித்துக் கொண்டிருக்கிறது. நான் இப்பொழுது சொன்னது, அரசினுடைய ஆய்விலே, அரசின் சார்பிலே தனியாக ஒரு தொழிற்சாலையைத் துவங்கும் எண்ணம் இப்பொழுது இல்லை என்பதாகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திரு. எஸ். என். இராமசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழகத்தில் எல்லா பஞ்சாயத்து யூனியன்களிலும் உள்ள கிராமங்களில் போடப்பட்டுள்ள தெரு விளக்குகளில் முன்னாலே போடப்பட்டது, ஸ்க்ரு டைப் பல்புகளாக இருந்தது, இப்பொழுது பின் டைப் பல்புகள் போடுகிற காரணத்தாலே மழை வருகிற நேரத்திலே, மழைத் தண்ணீர் உள்ளே போய், பல்புகள் ப்யூஸ் ஆகின்றன. அதைத் தடுப்பதற்காக, அரசு உடனடியாக அங்கு ஒரு தொழிற்சாலை அமைக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களிலே போடப்படுகிற பல்புகளை மின்சார இலாகாவினர் வாங்குகிறார்களா அல்லது உள்ளாட்சித் துறையினர் வாங்குகிறார்களா என்று தெரியாது. இருவரிலே ஒருவர் வாங்குவார்கள். நல்ல பல்புகளாக வாங்கச் சொல்லி அவர்களிடத்திலே கேட்கலாம்.

நீலகிரி மலைச் சரிவில் வசிக்கும் மலைவழ் மக்களின் கோரிக்கைகள்

*வினா எண். 707—திரு. கு. ரமணி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம் நீலகிரி மலைச்சரிவில் மானார், அத்திக்கடவு, பரளிப் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ்